## கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

# மக்கள் சாசனம்
# 2015

©
தமிழ்நாடு அரசு
2015

Hand in hand with our artisans...

# தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

## மக்கள் சாசனம் 2015

தமிழக கைவினைஞர்களின் நலனை உறுதி செய்யவும், கைத்திறத் தொழிலை மேம்படுத்தி முன்னேற்றவும் 1973ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 'பூம்புகார்' என்ற வணிக பெயரில் புகழ் பெற்று விளங்கும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை இம் மக்கள் சாசனம் வெளிப்படுத்துகிறது.

## நோக்கம்

தமிழக கைவினைஞர்களின் கடுமையான உழைப்பினால் பித்தளை, பஞ்சலோகம், மரம், கல் போன்றவற்றினால் உருவாக்கப்பட்ட சிறப்பு தன்மை வாய்ந்த கைவினைப் பொருட்களை உலகம் முழுவதும் கொண்டு சென்று சேர்ப்பதே இந்நிறுவனத்தின் நோக்கமாகும். மேற்படி கைவினைப் பொருட்கள் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள வீடுகள், நிறுவனங்கள், அரண்மனைகள் ஆகியவற்றை அலங்கரிப்பதுடன் தமிழ்நாட்டின் வளமான கலாச்சார பாரம்பரியத்தையும் பிரதிபலிக்கின்றன.

## குறிக்கோள்கள்

கைவினைஞர்களின் திறமையை மேம்படுத்த உரிய பயிற்சிகள் அளித்தல்

கைவினைஞர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்

கைவினை பொருட்களின் தரத்தை மேம்படுத்துதல்

கைத்திறப் பொருட்கள் உற்பத்தியில் ஏற்படும் கடினத்தன்மையை களைதல்

கைத்திறத் தொழிலில் உள்ள இடர்பாடுகளை குறைத்தல் / நீக்கல்

வடிவமைப்புகளில் புதுமையை ஊக்குவித்தல்

கைவினைஞர்களுக்கு சமூக பொருளாதார பாதுகாப்பு அளித்தல்

மாநிலத்தில் தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்களை ஆவணமாக்குதல் மற்றும் பதிவு செய்தல்.

தமிழக கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துதல்.

## 1. கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்துதல்

பொது மக்களின் தேவைக்காக கைவினைஞர்களால் தயாரிக்கப்படும் பல்வேறு வகையான கைத்திறப் பொருட்களை தனது 13 விற்பனை நிலையங்கள் வாயிலாகவும், உள்ளூர் பண்டிகைகள் மற்றும் முக்கிய தருணங்களை ஒட்டி உள்ளூர் மற்றும் வெளிமாநிலங்களில் நடத்தப்படும் பல்வேறு கண்காட்சிகளின் மூலமாகவும் இந்நிறுவனம் விற்பனை செய்து வருகிறது. பூம்புகார் விற்பனை நிலையங்களின் முகவரி, தொலைபேசி எண்கள் மற்றும் மின் அஞ்சல் முகவரி இணைப்பு 2ல் கொடுக்கப்பட்டுள்ளது.

கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் எந்த ஒரு கைவினைஞரும் தங்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை பூம்புகார் விற்பனை நிலையங்கள் மூலமாகவும் மற்றும் இக்கழகம் ஏற்பாடு செய்யும் பல்வேறு கண்காட்சிகளின் மூலமாகவும் விற்பனை செய்ய இணைப்பு 1 மற்றும் 2ல் குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அணுகலாம்.

சந்தை வாய்ப்பை மேலும் ஊக்குவிக்கும் விதமாக பூம்புகார் நிறுவனம் www.poompuhar.org என்ற மின் வணிக தளத்தினை 16.12.2014ல் துவக்கியது. மேலும் ஸ்மார்ட் போன் மற்றும் ஐபேட்களில் பூம்புகாருக்கென உருவாக்கப்பட்ட உயர்திறன் பயன்பாட்டினையும் (Hybrid App) துவக்கியுள்ளது.

விற்பனை நிலையங்கள், கண்காட்சிகள் மற்றும் மின் வணிகம் மூலமாக கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதுடன் கைவினைஞர்கள் தங்களுடைய பொருட்களை நுகர்வோரிடம் நேரடியாக விற்பனை செய்வதற்கு வசதியாக இக்கழகம், தமிழ்நாட்டில் இரண்டு இடங்களில் நிரந்தரக் கண்காட்சித் திடல்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. மாமல்லபுரத்தில் ஒரு கண்காட்சி திடலும் (சென்னைக்கு அருகில்) மற்றொன்று கன்னியாகுமரியிலும் (தற்போது முடிவடையும் நிலையில் உள்ளது) அமைய உள்ளது.

## 2. கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருதல்

இக்கழகம், பித்தளை விளக்குகள், பஞ்சலோக சிலைகள், கலைத்தட்டுகள், மரச்சிற்பங்கள் மற்றும் கற்சிற்பங்கள் போன்றவற்றை தயாரிக்கும் உற்பத்தி நிலையங்களை நாச்சியார்கோவில், வாகைகுளம், மதுரை, சுவாமிமலை, தஞ்சாவூர், கள்ளக்குறிச்சி மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் செயல்படுத்தி வருகிறது. உற்பத்தி நிலையங்களின் முகவரிகள், தொலைபேசி எண்கள், மற்றும் மின் அஞ்சல் முகவரிகள், இணைப்பு–3ல் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த உற்பத்தி நிலையங்கள் மூலமாக கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகிறது. வேலை வாய்ப்பு தேடும் கைவினைஞர்கள் மேற்படி கைத்திறத் தொழில்களில் ஒன்றில் வாய்ப்பு பெற இணைப்பு 1 மற்றும் 3ல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களை அணுகலாம்.

## 3. பயிற்சி

கைத்திறப் பொருட்களை உற்பத்தி செய்யும் திறனை மேம்படுத்திக் கொள்வதற்காக இக்கழகம் 6 மாதம் / 1 வருடம் / 3 வருட பயிற்சிகளை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நடத்த ஏற்பாடு செய்து வருகிறது. இத்தகைய கைத்திறப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான திறமைகளைப் பெற ஆர்வமுள்ளவர்கள் காலமுறைதோறும் இக்கழகம் ஏற்பாடு செய்யும் பயிற்சித் திட்டங்களில் சேரலாம். இதன் மூலம் கைத்திறத் தொழில்களில் திறமைகளை வளர்த்துக்கொண்டு கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்வதை தொழிலாக மேற்கொள்ளலாம்.

## 4. கைவினைஞர்களுக்கு பாராட்டு

### (அ) இந்திய அரசின் சில்ப் குரு விருது மற்றும் தேசிய விருது

சில்ப் குரு விருது, இந்திய அரசினால் வருடந்தோறும் கைவினைஞர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருது ஆகும். இதுவரை தமிழ்நாட்டை சார்ந்த ஐந்து தலை சிறந்த கைவினைஞர்களுக்கு சில்ப குரு விருது வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்திய அரசு வருடந்தோறும் சிறந்த கைவினைஞர்களுக்கு தேசிய விருதுகளை வழங்கி வருகிறது. இவ்விருது ரூ.1.00 லட்சம் ரொக்கப் பரிசு, ஒரு தாமிர பத்திரம் மற்றும் ஒரு அங்கவஸ்திரத்தினை கொண்டதாகும். இவ்விருதுகள் மேதகு இந்திய குடியரசு தலைவர் அவர்களால் வழங்கப்படுவதாகும். இதுவரை தமிழ்நாட்டை சார்ந்த இருபத்தி ஏழு சிறந்த கைவினைஞர்களுக்கு தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், மற்றும் அபிவிருத்தி ஆணையர் (கைத்திறன்), அலுவலகம், இந்திய அரசு, புதுடெல்லியுடன் இணைந்து இவ்விருதுக்கான மாநில அளவிலான தேர்வுகளை நடத்த ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது.

### ஆ) “வாழும் கைவினைப் பொக்கிஷம்” விருதுகள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்ட பேரவை விதி எண்.110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பின்படி 65 வயதுக்கு மேற்பட்ட திறன்மிகு கைவினைஞர்களுக்கு, ‘‘வாழும் கைவினைப் பொக்கிஷம்’’ என்ற விருது 2013–2014 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இவ்விருது தலா ரூ.1.00 லட்சம் ரொக்கப்பரிசு, 8 கிராம் தங்க பதக்கம், ஒரு தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழும் கொண்டதாகும். இவ்விருது 10 கைவினைஞர்களுக்கு வருடந்தோறும் ரூ.15.00 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 20 தலை சிறந்த கைவினைஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

இவ்விருது குறித்தான அறிவிப்பு முன்னணி தமிழ் நாளிதழ் / நிறுவன இணையதளத்தில் ஒவ்வொரு வருடமும் வழக்கமாக ஜுலை மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படும்.

**இ) பூம்புகார் மாநில விருதுகள்**

தமிழகத்தில் கைத்திறன் மேம்பாட்டுக்காக பங்களிப்பு செய்த சிறந்த 10 கைவினைஞர்களை தேர்வு செய்து இந்நிறுவனம் வருடந்தோறும் பூம்புகார் மாநில விருதுகளை வழங்கி வருகிறது. இவ்விருதுகள் ரூ.50,000/– ரொக்க பரிசு, 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிர பத்திரம் மற்றும் தகுதிச் சான்றிதழும் கொண்டதாகும். இவ்விருது பெற்ற கைவினைஞர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவராக இருக்கும் பட்சத்தில் இந்திய அரசால் வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.2,000/– பெற தகுதி உடையவராகிறார்கள்.

இவ்விருது குறித்தான அறிவிப்பு முன்னணி தமிழ் நாளிதழ் / நிறுவன இணையதளத்தில் ஒவ்வொரு வருடமும் வழக்கமாக ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படும்.

**ஈ) பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருதுகள்**

2011–2012 ஆம் ஆண்டு முதல் *“பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது”* என்ற விருது அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விருது ரொக்கப்பரிசு ரூ.5000/–, ஒரு வெள்ளி பதக்கம் மற்றும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும். ஒவ்வொரு வருடமும் 16 கைத்திறத் தொழில்களிலிருந்து 85 கைவினைஞர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. பெண் கைவினைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், அவர்களுடைய சுய சார்பினை உறுதிப்படுத்தும் வகையிலும் மொத்த விருதில் 17 விருதுகள் பெண் கைவினைஞர்களுக்கு வழங்கப்படுகிறது.

இவ்விருது குறித்தான அறிவிப்பு முன்னணி தமிழ் நாளிதழ் / நிறுவன இணையதளத்தில் ஒவ்வொரு வருடமும் வழக்கமாக செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படும்.

**உ) அடுத்த தலைமுறை கைவினைஞர்களுக்கான விருதுகள்**

தமிழ்நாட்டின் பாரம்பரியம் மிக்க கைத்திறத் தொழில்கள் நீடித்திருக்கவும் அவற்றை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்வதற்கும் இளைஞர்களை இத்துறையில் ஊக்கப்படுத்துதல் அவசியமாகிறது. இதனை செயல்படுத்தும் வகையில் 2013–2014–ஆம் ஆண்டு முதல் 30 வயதிற்குட்பட்ட இளம் கைவினைஞர்களுக்கு இக் “கைத்திறன் போட்டி”, அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போட்டியில் சுமார் 65 கைவினைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு

அவர்களுக்கு வெள்ளி பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுகிறது. இப்போட்டிகள் முக்கிய கைத்திறப் பொருட்களின் மையங்களில் நடத்தப்படும். 2014–2015வரை 180 இளம் கைவினைஞர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விருது குறித்தான அறிவிப்பு முன்னணி தமிழ் நாளிதழ் / நிறுவன இணைய தளத்திலும் ஒவ்வொரு வருடமும் வழக்கமாக அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படும்.

**ஊ) கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது**

தமிழ்நாடு கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்பவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு “கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது” 2014–2015–ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விருது ரூ.2.50 இலட்சம் செலவில் ஒவ்வோர் வருடமும் இரு நபர்களுக்கு வழங்கப்படும்.

இவ்விருது குறித்தான அறிவிப்பு முன்னணி தமிழ் நாளிதழ் / நிறுவன இணைய தளத்தில் ஒவ்வொரு வருடமும் வழக்கமாக ஆகஸ்டு மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படும்.

**எ) குழு உற்பத்தி விருது**

கைவினைப் பொருட்கள் கைவினைஞர்களைக் கொண்ட ஒரு குழுவினரால் தயாரிக்கப்படுகிறது. இக்குழுவில் தனிப்பட்ட ஒரு கைவினைஞரை விருதுக்காக இனம் காண்பது கடினமான செயலாகும். எனவே ஒரு குழுவாக பணிபுரிந்து ஒரு பொருளைத் தயாரித்த குழுவினரை கௌரவிக்கும் நோக்கில் “குழு உற்பத்தி விருது” 2014–2015–ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விருது ஒவ்வொரு வருடமும் 3 குழுக்களுக்கு ரூ. 3.75 இலட்சம் செலவில் வழங்கப்படுகிறது.

இவ்விருது ரூ.40000/– ரொக்கப் பரிசு, 4 கிராம் தங்கப்பதக்கம், ஒரு தாமிரப்பத்திரம் மற்றும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும்.

இவ்விருது குறித்தான அறிவிப்பு முன்னணி தமிழ் நாளிதழ் / நிறுவன இணைய தளத்தில் ஒவ்வொரு வருடமும் வழக்கமாக ஆகஸ்டு மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படும்.

**ஏ) பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது**

கைவினைஞர்களால் தயாரிக்கப்படும் பல கலைப்படைப்புகளும் பெரும்பாலும், அலங்காரம் சார்ந்தோ அல்லது மதம் சார்ந்தோ அமைகின்றன. எனவே பயன்பாடு சார்ந்த பொருட்களைத் தயாரிக்க கைவினைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில், “பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது” அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விருது வருடந்தோறும் 3 கைவினைஞர்களுக்கு ரூ.3.75 இலட்சம் செலவில் வழங்கப்படுகிறது.

இவ்விருது ரூ.40000/– ரொக்கப் பரிசு, 4 கிராம் தங்கப்பதக்கம், ஒரு தாமிரப்பத்திரம் மற்றும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும்.

இவ்விருது குறித்தான அறிவிப்பு முன்னணி தமிழ் நாளிதழ் / நிறுவன இணைய தளத்தில் ஒவ்வொரு வருடமும் வழக்கமாக ஆகஸ்டு மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படும்.

மேற்கண்ட எட்டு விருதுகளுக்கான தகவல்களை பெற இணைப்பு–1ல் குறிப்பிடப்பட்ட அலுவலரை தொடர்பு கொள்ளலாம்.

## 5. கைவினைஞர்களுக்கான நலதிட்டங்கள்

### 1. கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்துதல்

அ) இந்நிறுவனம் தன்னுடைய உற்பத்தி நிலையங்கள் மூலமாக கைவினைஞர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினை அளிக்கிறது.

ஆ) இந்நிறுவனத்தின் சிறப்பு திட்டங்கள் வாயிலாகவும் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி வருகிறது.

இ) இந்நிறுவனம் தனது விற்பனை நிலையங்கள், கண்காட்சிகள் மற்றும் மின் வணிக தளம் மூலம் கைவினைஞர்களுடைய பொருட்களுக்கு சந்தை வாய்ப்பு வழங்கி வருவதன் மூலம், மறைமுகமாக கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி வருகிறது.

## 6. தகவல் அறியும் உரிமை சட்டம்

தகவல் அறியும் உரிமை சட்டம் 2005ன் கீழ் காணும் அலுவலர்கள் தகவல் வழங்கும் அலுவலர்/மேல் முறையீட்டு அலுவலராக பணிபுரிகிறார்கள்.

| அலுவலக முகவரி | தகவல் வழங்கும் அலுவலர் | மேல் முறையீட்டு அலுவலர் | தொலைபேசி எண். |
|---|---|---|---|
| தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், 759, அண்ணா சாலை, சென்னை–600 002. | பணி மேலாளர் | தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் | 044–28518716<br>044–28551359 |

**இணைப்பு–1**

**தலைமை அலுவலகம்**

| வ. எண் | சேவையின் வகைகள் | அணுக வேண்டிய அதிகாரி | அலுவலக விலாசம்/மின் அஞ்சல் |
|---|---|---|---|
| 1 | சந்தை வாய்ப்பு ஆதரவு, கண்காட்சி மற்றும் மின் வணிகம் | விற்பனை மேலாளர் தொலைபேசி எண் 044–28518716 / 28521798 | தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், 759, அண்ணா சாலை, சென்னை–600 002<br><br>மின்அஞ்சல்:- thdcltd@tnpoompuhar.gov.in tamilnaduhandicrafts@yahoo.co.in tamilnaduhandicrafts@gmail.com<br><br>இணையதளம்:- www.poompuhar.org |
| 2 | பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகள் | உற்பத்தி மேலாளர் தொலைபேசி எண் 044–28414408/ 28521271 | |
| 3 | விருதுகள் | மேலாளர் (மேம்பாட்டு பிரிவு) தொலைபேசி எண். 044 –28521325/ 28525094 | |

## இணைப்பு–2

### விற்பனை நிலையங்கள்

| வ. எண் | அணுக வேண்டிய அதிகாரி | அலுவலக விலாசம் |
|---|---|---|
| 1 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>108, அண்ணா சாலை<br>சென்னை 600 002<br>தொலைபேசி எண் 044– 28520624 / 28550157<br>மின் அஞ்சல் – **PSSRChennai@tnpoompuhar.gov.in** |
| 2 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>மேற்கு பொலிவார் சாலை, சிங்காரதோப்பு,<br>திருச்சி 620 008<br>தொலைபேசி எண் 0431– 2704895<br>மின் அஞ்சல் – **PSSRTrichy@tnpoompuhar.gov.in** |
| 3 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>மங்கம்மாள் சத்திரம் கட்டடங்கள்,<br>இரயில்வே சந்திப்பு எதிரில்,<br>12 மேற்கு வெளி வீதி,<br>மதுரை – 625 001<br>தொலைபேசி எண் 0452-2340517<br>மின் அஞ்சல் – **PSSRMadurai@tnpoompuhar.gov.in** |
| 4 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>இரயில்வே ஸ்டேஷன் சாலை,<br>தஞ்சாவூர் 613 001<br>தொலைபேசி எண் 04362–230060<br>மின் அஞ்சல் –<br>**PSSRThanjavur@tnpoompuhar.gov.in** |
| 5 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>கடற்கரை சாலை,<br>மாமல்லபுரம் 603 104<br>தொலைபேசி எண் 044– 27442224<br>மின் அஞ்சல் – **pssrmamalla@tnpoompuhar.gov.in** |
| 6 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>அண்ணா பட்டு மாளிகை,<br>காதிகிராப்ட் பில்டிங்<br>திருவள்ளுவர் சிலை அருகில்<br>சேலம் 636 001<br>தொலைபேசி எண் 0427–2414994<br>மின் அஞ்சல் – **PSSRSalem@tnpoompuhar.gov.in** |
| 7 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>1239, பெரிய கடைவீதி,<br>கோயம்புத்தூர் 641 001<br>தொலைபேசி எண் 0422–2391055<br>மின் அஞ்சல் –<br>**PSSRCoimbatore@tnpoompuhar.gov.in** |

| | | |
|---|---|---|
| 8 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>1154, மேட்டூர் சாலை,<br>ஈரோடு 638 001<br>தொலைபேசி எண் 0424–2254885<br>மின் அஞ்சல் – **PSSRErode@tnpoompuhar.gov.in** |
| 9 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>கலைமகள் இல்லம், சன்னதி தெரு,<br>கன்னியாகுமரி 629 702<br>தொலைபேசி எண் 04652–246040<br>மின் அஞ்சல் –<br>**PSSRKanyakumari@tnpoompuhar.gov.in** |
| 10 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>திருவலஞ்சுழி பிரதான சாலை<br>சுவாமிமலை – 612 302.<br>தொலைபேசி எண் 0435–2454442<br>மின் அஞ்சல் –<br>**pssrswamimalai@tnpoompuhar.gov.in** |
| 11 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>124, டி.எஸ்.ஆர் பெரிய கடை தெரு<br>கும்பகோணம் – 612 001<br>தொலைபேசி எண் 0435-2425199<br>மின் அஞ்சல் –<br>**PSSRKumbakonam@tnpoompuhar.gov.in** |
| 12 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>சி–1, ஸ்டேட் எம்போரியா காம்ப்ளெக்ஸ்,<br>இர்வின் சாலை, பாபா கரக் சிங் மார்க்,<br>புதுடெல்லி 110 001<br>தொலைபேசி எண் 011–23363913<br>மின் அஞ்சல் –<br>**PSSRNewdelhi@tnpoompuhar.gov.in** |
| 13 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>கடை எண் 21–22 முதல் தளம்,<br>சி.ஐ.டி ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்,<br>எண் 2 காரியாஉறாட் சாலை,<br>கொல்கத்தா 700 068<br>தொலைபேசி எண் 033–24237028<br>மின் அஞ்சல் – **PSSRKolkata@tnpoompuhar.gov.in** |

**இணைப்பு–3**

**உற்பத்தி நிலையங்கள்**

| வ. எண் | அணுக வேண்டிய அதிகாரி | அலுவலக விலாசம் |
|---|---|---|
| 1 | மேலாளர் (விற்பனை மற்றும் உற்பத்தி பிரிவு) | பூம்புகார் பித்தளை மற்றும் வெண்கல பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>நாச்சியார் கோவில் 612 602<br>தஞ்சாவூர் மாவட்டம்<br>தொலைபேசி எண் 0435–2466553<br>மின் அஞ்சல் –<br>**pbbmpcnkoil@tnpoompuhar.gov.in** |
| 2 | மேலாளர் (விற்பனை மற்றும் உற்பத்தி பிரிவு) | பூம்புகார் கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>திருவலஞ்சுழி, பிரதானசாலை,<br>சுவாமிமலை 612 302, தஞ்சாவூர் மாவட்டம்<br>தொலைபேசி எண் 0435–2454442<br>மின் அஞ்சல் –<br>**papcswamimalai@tnpoompuhar.gov.in** |
| 3 | மேலாளர் (விற்பனை மற்றும் உற்பத்தி பிரிவு) | பூம்புகார் பித்தளை மற்றும் வெண்கலப் பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>மன்னார் கோயில் அஞ்சல்,<br>அம்பாசமுத்திரம் (வழி)<br>வாகைக்குளம் 627 413<br>திருநெல்வேலி மாவட்டம்<br>தொலைபேசி எண் 04634–250476<br>மின் அஞ்சல் :–<br>**pbbmpcvkulam@tnpoompuhar.gov.in** |
| 4 | மேலாளர் (விற்பனை மற்றும் உற்பத்தி பிரிவு) | பூம்புகார் கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>ரயில்வே ஸ்டேஷன் ரோடு,<br>தஞ்சாவூர் 613 001<br>தொலைபேசி எண் 04362–230107<br>மின்அஞ்சல் –<br>**papcthanjavur@tnpoompuhar.gov.in** |
| 5 | மேலாளர் (விற்பனை மற்றும் உற்பத்தி பிரிவு) | பூம்புகார் கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>தொழிற்பேட்டை, மதுரை 625 007<br>தொலைபேசி எண் 0452–2566774<br>மின் அஞ்சல் –<br>**pbapcmadrai@tnpoompuhar.gov.in** |
| 6 | மேலாளர் (விற்பனை மற்றும் உற்பத்தி பிரிவு) | பூம்புகார் சந்தன மரச்சிற்பங்கள் உற்பத்தி நிலையம்,<br>54–55 சிட்கோ தொழிற்பேட்டை,<br>கள்ளக்குறிச்சி 606 202<br>தொலைபேசி எண் 04151–222508<br>மின் அஞ்சல் –<br>**pscckkurichi@tnpoompuhar.gov.in** |

| | | |
|---|---|---|
| 7 | மேலாளர் (விற்பனை மற்றும் உற்பத்தி பிரிவு) | பூம்புகார் கற்சிற்ப நிலையம்,<br>கடற்கரை சாலை, மாமல்லபுரம் 603 104<br>தொலைபேசி எண் 044–27443224<br>மின் அஞ்சல் –<br>**pssrmamalla@tnpoompuhar.gov.in** |

தமிழ் நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

759, அண்ணா சாலை, சென்னை–600 002

**2015–2016 ஆம் ஆண்டிற்கான மக்கள் சாசனம்**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | இத்திட்டத்தின் விவரங்கள் | பயனாளிகளுக்கு கிடைக்கும் உதவிகள் (ரூபாயில்) | உதவிகளைப் பெறுவதற்கு வேண்டிய தகுதிகள் | தொடர்பு கொள்ள வேண்டிய அதிகாரி | விண்ணப்பம் செய்வதற்கான கால அட்டவணை | விண்ணப்பத் தினை ஆய்வு செய்வதற்கு தேவைப்படும் காலம் (நாட்களில்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது | இவ்விருது 2013–2014 ஆம் ஆண்டு 65 வயதிற்கு மேற்பட்ட திறன்மிகு கைவினைஞர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டது. | இவ்விருது தலா ரூ.1.00 லட்சம் ரொக்கப்பரிசு, ஒரு தாமிரப்பத்திரம், 8 கிராம் தங்க பதக்கம் மற்றும் சான்றிதழ் கொண்டதாகும். | 65 வயதிற்கு மேற்பட்ட கைவினைஞர்கள் | மேலாளர் (மேம்பாட்டுப் பிரிவு) | இவ்விருது குறித்தான அறிவிப்பு வழக்கமாக ஜூலை மாதம் முதல் வாரம் விளம்பரம் வெளியிடப்படும் | 90 நாட்கள் |
| 2 | பூம்புகார் மாநில விருது | தமிழகத்தில் கைத்திறன் மேம்பாட்டுக்காக பங்களிப்பு செய்த கைவினைஞர்களை தேர்வு செய்து இவ்விருது வழங்கப்படுகிறது. | இவ்விருது தலா ரூ.50,000/–ரொக்க பரிசு, 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிர பத்திரம் மற்றும் தகுதிச் சான்றிதழ் கொண்டதாகும். இவ்விருது பெற்றவர் இந்திய அரசால் வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம் பெற தகுதி உடையவராகிறார். | தமிழக கைத்திறத் தொழில்களில் சிறந்த கைவினைஞர்கள் | மேலாளர் (மேம்பாட்டுப் பிரிவு) | விருது குறித்தான அறிவிப்பு வழக்கமாக ஆகஸ்டு மாதம் முதல் வாரம் விளம்பரம் வெளியிடப்படும் | 90 நாட்கள் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது | கைவினைஞர்களை அங்கீகரித்து கௌரவப்–படுத்துவதற்காக 2011–2012 ஆம் ஆண்டு முதல் பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது என்ற புதிய விருது அறிமுகப்படுத்தப்பட்டது | இவ்விருது ரூ.5000/–, ஒரு வெள்ளிப்பதக்கம் மற்றும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும். | மாவட்ட அளவில் மிகச்சிறந்த கைவினைஞர்கள். | மேலாளர் (மேம்பாட்டுப் பிரிவு) | விருது குறித்தான அறிவிப்பு வழக்கமாக செப்டம்பர் மாதம் முதல் வாரம் விளம்பரம் வெளியிடப்படும் | 90 நாட்கள் |
| 4 | அடுத்த தலைமுறை கைவினைஞர்களுக்கான விருதுகள் | தமிழ்நாட்டின் பாரம்பரிய மிக்க கைத்திறத் தொழில்கள் நீடித்திருக்கவும் அவற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதற்கும் இத்துறையில் இளைஞர்களை ஊக்கப்படுத்துவது. | இவ்விருது வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் கொண்டதாகும் | இவ்விருது 30 வயதிற்குட்பட்ட இளம் கைவினைஞர்கள் | மேலாளர் (மேம்பாட்டுப் பிரிவு) | விருது குறித்தான அறிவிப்பு வழக்கமாக அக்டோபர் மாதம் முதல் வாரம் விளம்பரம் வெளியிடப்படும் | 90 நாட்கள் |
| 5 | கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது | கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்பவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு வழங்கப்படுகிறது | இவ்விருது ரூ.40,000/–, 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் கொண்டதாகும். | கைவினைப்பொருட்களை ஏற்றுமதி செய்பவர்கள். | மேலாளர் (மேம்பாட்டுப் பிரிவு) | விருது குறித்தான அறிவிப்பு வழக்கமாக ஆகஸ்டு மாதம் முதல் வாரம் விளம்பரம் வெளியிடப்படும் | 90 நாட்கள் |
| 6 | குழு உற்பத்தி விருது | கைவினைப் பொருட்கள் ஒரு குழுவினால் தயாரிக்கப்படுவதாகும். 3 குழுக்களுக்கு வருடந்தோறும் இவ்விருது வழங்கப்படுகிறது | இவ்விருது ரூ.40,000/–, 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் கொண்டதாகும். | ஒரு குழுவாக பணிபுரிந்து ஒரு பொருளைத் தயாரிக்கும் கைவினைஞர் குழு | மேலாளர் (மேம்பாட்டுப் பிரிவு) | விருது குறித்தான அறிவிப்பு வழக்கமாக ஆகஸ்டு மாதம் முதல் வாரம் விளம்பரம் வெளியிடப்படும் | 90 நாட்கள் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது | இவ்விருது பயன்பாடு சார்ந்த பொருட்களை தயாரிக்கும் கைவினைஞர்களுக்கு வழங்கப்படுகிறது | இவ்விருது ரூ.40,000/–, 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் கொண்டதாகும். | பயன்பாடு சார்ந்த கைவினைப்பொருட்களை தயாரிக்கும் கைவினைஞர்கள். | மேலாளர் (மேம்பாட்டுப் பிரிவு) | விருது குறித்தான அறிவிப்பு வழக்கமாக ஆகஸ்டு மாதம் முதல் வாரம் விளம்பரம் வெளியிடப்படும் | 90 நாட்கள் |